**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 65/2022</u>**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய **<u>ரெத்தினகுமார் PW.1</u>** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 27.01.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ரெத்தினகுமார் | | |
| Father Name | : கணேசன் | Court | : |
| Village | : தில்லையாடி. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 60 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

10.02.2010 தேதியிட்ட ஜானகி அவர்களுக்கு தனராஜ் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.10.2013 தேதியிட்ட ஜானகி என்பவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.11.2013 தேதியிட்ட தரங்கம்பாடி மண்டல துணை வட்டாச்சியர் வழங்கிய பட்டா மாறுதல் விபரத்தின் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.07.2022 தேதியிட்ட வாதி பெயருக்கு தரங்கம்பாடி தலைமையிடத்து துணை வட்டாச்சியர் வழங்கிய மனைவாரி தோராய பட்டாவின் அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.